Vision Initiative

A partnership promoting eye health and vision care

# கண்புரை நோய்



கண்புரை நோயினால் பார்வை எப்படிப் பாதிக்கப்படக் கூடும் என்பதற்கான உதாரணத்தினை இப்படம் காண்பிக்கிறது.

## கண்புரை நோய் என்பது என்ன?

தெளிவற்ற பார்வையை ஏற்படுத்தக்கூடிய வகையில் கண்ணின் உள்ளே இருக்கும் ‘வில்லை’(lens) யில் ஏற்படும் மங்கலான தன்மையே கண்புரை நோய் எனப்படுகிறது.

பெரும்பான்மையான கண்புரை நோய்கள் வயது கூடுவதன் காரணமாகவும், நீண்டகாலத்திற்கு ‘புற-ஊதாக் கதிர்’(ultraviolet light) களின் தாக்கத்திற்கு ஆட்படுவதனாலும் உருவாகின்றன.

அவுஸ்திரேலியாவில் ஏற்படும் திருத்தப்படக் கூடிய பார்வை இழப்பிற்கு கண்புரை நோய் பிரதானமான காரணங்களாக அமைகின்றன.

## அறிகுறிகள் யாவை?

பொதுவாக கண்புரை நோய்கள் பின் வருவனவற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும்:

- கண் மருத்துவரால் பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடிகளால் அபிவிருத்தியடையாமல் இருக்கக் கூடிய மெதுவான மற்றும் வலி ஏற்படுத்தாதப் பார்வை மங்கல்.

## Cataracts

This image shows an example of how cataracts may affect vision.

## What is a cataract?

A cataract is a clouding of the lens inside the eye which may result in poor vision.

Most cataracts form as a result of ageing and long-term exposure to ultraviolet light.

Cataracts are a leading cause of reversible vision loss in Australia.

## What are the symptoms?

Cataracts are usually associated with:

- Slow and painless blurring of vision that may not improve with prescription glasses.

Tamil. April 2017. மூலவளங்களை வேண்டிப் பெறலாம்.
விக்டோரிய மாநில அரசாங்கத்தின் ஆதரவிற்கு Vision 2020 Australia ஏற்பு அளிக்கிறது

VICTORIA State Government

- பிரகாசமான வெளிச்சத்தில் கண் அதிகம் கூசத் துவங்குதல் அதாவது இரவுவேளையில் வாகனம் ஓட்டும் போது இருப்பதைப் போன்றது.
- வண்ணங்களைப் பார்க்கும் விதத்தில் ஏற்படும் மாற்றங்கள். பொருட்களில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமான பூசல் இருப்பது போன்ற தோற்றம்.

- Increased sensitivity to bright lights, such as while driving at night.
- Changes in how colour is seen. Objects may appear to have a yellow or brown tinge.

## யாருக்கு ஆபத்து?

- 40 வயதிற்கும் மேற்பட்டவர்கள். 50 வயதைத் தாண்டியபிறகுவரும் ஒவ்வொரு பத்துஆண்டிற்கும் இந்தஆபத்து இரண்டு மடங்கைவிட அதிகரிக்கும்.
- விவசாயிகள் மற்றும் வெளிப்புறங்களில் வேலை செய்பவர்களைப் போன்ற சூரிய ஒளித் தாக்கத்திற்கு அதிகநேரம் ஆட்படும் தொழிலாளர்கள்.
- சர்க்கரை நோய் உள்ளவர்கள், புகை பிடிப்பவர்கள் மற்றும் 'கார்ட்டிகோஸ்டிராய்டு' (corticosteroid) மருந்துகளை நீண்டகாலமாக எடுத்துக் கொண்டிருப்பவர்கள்.
- கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளவர்கள்.

## Who is at risk?

- People aged over 40. For each decade over 50 years of age the risk more than doubles.
- People who spend long periods of time exposed to sunlight such as farmers and outdoor workers.
- People who have diabetes, smokers and those who have used corticosteroid medications for long periods.
- People who have had an eye injury.

## என்ன செய்யலாம்?

- சூரிய ஒளியிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கறுப்புக் கண்ணாடிகளையும், தொப்பி ஒன்றையும் அணியுங்கள்.
- புகை பிடிப்பதை நிறுத்துங்கள்.
- கண் பரிசோதகர் ஒருவரிடம் (பார்வைச் சோதகர் (optometrist) அல்லது கண் மருத்துவர் (ophthalmologist)) தவறாமல் விழிச் சோதனைகளை மேற்கொள்ளுங்கள். கண்புரை நோய்களைக் கண்டுபிடிக்கக் கண் சோதனைகள் அவசியம்.
- உங்களது பார்வையில் வேகமாக மாற்றம் ஏற்பட்டால் தாமதிக்காமல் கண் நல மருத்துவர் ஒருவரைப் பாருங்கள்.

பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடிகள் சிலருடைய பார்வையை மேம்படுத்த உதவக்கூடும். ஆனாலும், கண்புரை நோய் இன்னும் மோசமாக ஆகும் போது பார்வையை மீண்டும் கொண்டுவர அறுவை சிகிச்சைத் தேவைப்படக்கூடும்.

கண்புரை நோய் அறுவை சிகிச்சையை கண் மருத்துவர் ஒருவர் செய்வார். கண்ணில் உள்ள மங்கிப் போன வில்லையானது செயற்கை வில்லை ஒன்றால் இடமாற்றம் செய்யப்படும். கண்புரை நோய் அறுவை சிகிச்சை மிகவும் சாதாரணமானது, பாதுகாப்பானது மற்றும் குறிப்பிட்ட இடத்தை மட்டும் மரத்துப் போகச் செய்யும, விறைப்புமருந்தைக் கொடுத்துப் பகல் நேர அறுவைசிகிச்சையாக இது செய்யப்படும்.

## What can be done?

- Wear sunglasses and a hat when outdoors to protect the eyes from the sun.
- Stop smoking.
- Have regular eye tests with an eye health professional (optometrist or ophthalmologist). Eye tests are essential for the detection of cataracts.
- Visit an eye health professional without delay if your vision changes rapidly.

New prescription glasses may help to improve vision for some people. But as cataracts worsen, surgery may be required to restore vision.

Cataract surgery is performed by an ophthalmologist. The cloudy lens in the eye is replaced with a new synthetic one. Cataract surgery is common, very safe, and is usually done as a day surgery procedure under local anaesthesia.

## மேலதிகத் தகவல்களுக்கு

கண் பரிசோதகர் அல்லது பொது மருத்துவர் (GP) ஒருவரிடம் பேசுங்கள்.

செல்க: www.visioninitiative.org.au

பெரும்பான்மையான பார்வைச் சோதனை சேவைகளுக்கு மெடிகெயர் (Medicare) தள்ளுபடி உண்டு. பார்வைச் சோதனையாளர் ஒருவரைப் பார்க்க பரிந்துரை ஒன்று தேவையில்லை. தேவைப்பட்டால், உங்களது பொது மருத்துவர் (GP) அல்லது பார்வைச் சோதகர், கண் மருத்துவர் ஒருவரைப் பார்க்க உங்களைப் பரிந்துரைக்கலாம்.

பார்வை இழப்பிற்கு ஏற்ற சரிப்படுத்தல்களைச் செய்துகொண்டு, சுதந்திரமாக இருந்து தாம் விரும்பும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட உதவும் சேவைகளும் ஆதரவுதவிகளும் உள்ளன. மேலதிகமாகத் தெரிந்துகொள்ள கண் பரிசோதகர் ஒருவர் அல்லது உங்களது பொது மருத்துவருடன் (GP) பேசுங்கள்.



## For more information

Speak to an eye health professional or GP.

Visit www.visioninitiative.org.au

A Medicare rebate is available for most optometry services. You do not need a referral to see an optometrist. If required, your GP or optometrist can refer you to an ophthalmologist.

There are services and supports to help people adjust to vision loss, remain independent and continue to take part in their chosen activities. Speak to an eye health professional or your GP to find out more.